# வெளிச்சுற்றுலாவைப் பற்றிய பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்
# Excursion information for parents/carers

அன்புடைய பெற்றோர்/பராமரிப்பாளருக்கு

வகுப்பறையில் நடைபெறும் பாடவேலைகளுக்கும் மேலாக, உங்கள் பிள்ளை படிக்கும் வகுப்பிற்கென வெளிச்சுற்றுலா ஒன்று திட்டமிடப்பட்டுவருகிறது. இந்த வெளிச்சுற்றுலாவைப் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## Excursion details for completion by organising teacher
### வெளிச்சுற்றுலாவைப் பற்றிய விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| Place of excursion<br>வெளிச்சுற்றுலா செல்லும் இடம் | | Date/s of excursion<br>வெளிச்சுற்றுலாவிற்கான திகதி/திகதிகள் | |
| Place of departure<br>சுற்றுலா புறப்படும் இடம் | | Time of departure<br>புறப்பாட்டு நேரம் | |
| Place of return<br>திரும்பி வந்து சேரும் இடம் | | Time of return<br>திரும்பல் நேரல் | |
| Cost of excursion<br>வெளிச்சுற்றுலாவிற்கு ஆகும் செலவு | | Payment due date<br>கட்டணம் செலுத்தப்பட வேண்டிய திகதி | |

| | |
|---|---|
| Excursion objectives<br>வெளிச்சுற்றுலாவின் நோக்கங்கள் | |
| Transport details<br>போக்குவரத்தைப் பற்றிய விபரங்கள் | |
| Staff member with emergency care training<br>அவசர-காலப் பராமரிப்புப் பயிற்சி பெற்றுள்ள பணியாளர் | |
| Staff member with Cardio Pulmonary Resuscitation (CPR) training<br>'இதய-நுரையீரல் புத்துயிரூட்டல்' (Cardio Pulmonary Resuscitation (CPR)) பயிற்சி பெற்றுள்ள பணியாளர் | |
| Other supervisory staff<br>மற்ற மேற்பார்வைப் பணியாளர்கள் | |

Teacher to tick what students need to bring

இந்த வெளிச்சுற்றுலாவின் பொழுது மாணவ-மாணவியர் பின்வருவனவற்றைத் தம்முடன் கொண்டுவர வேண்டியிருக்கும்

- ☐ நீச்சல் உடை, துவாலை மற்றும் நெகிழிப் (ப்ளாஸ்டிக்) பை<br>Swimsuit, towel and plastic bag
- ☐ நீர்-உட்புகாத உடை, உதாரணமாக, மழைக்-கோட்டு<br>Waterproof clothing e.g. raincoat
- ☐ மாற்றாடைகள்<br>Change of clothing
- ☐ வெது-வெதுப்பு ஆடைகள்<br>Warm clothing
- ☐ சூரிய-ஒளிக் காப்புத் தொப்பி மற்றும் சூரியக்-களிம்பு (ஸன்ஸ்கிரீன்)<br>Sunhat and sunscreen
- ☐ தின்பண்டங்கள், மதிய உணவு மற்றும் பானங்களை வீட்டிலிருந்து கொண்டுவரவும்<br>Bring snacks, lunch and drink from home
- ☐ மதிய உணவை வெளிச்சுற்றுலாவின் பொழுது வாங்கிக்கொள்ளலாம்<br>Lunch can be bought during the excursion
- ☐ மதிய உணவிற்கான செலவு வெளிச்சுற்றுலாவிற்கான கட்டணத்தில் அடக்கம்<br>Cost of lunch is included in excursion cost
- ☐ முழு பாடசாலைச்-சீருடை<br>Full school uniform
- ☐ மற்றவை<br>Other ____________

இந்த வெளிச்சுற்றுலாவில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்ற செயற்பாடுகள் கீழே குறியிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன, அத்துடன், அவை உங்களுக்குப் பொருந்துமானால், தொடரும் பக்கங்களில் அவற்றைப் பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Teacher to tick any other activities involved in this excursion

- ☐ வேறு செயற்பாடுகள் இல்லை
  No other activities
- ☐ விமானப் பயணம்
  Travel by air
- ☐ பயணக் காப்பீடு
  Travel insurance
- ☐ நீச்சல் நடவடிக்கை
  Swimming activity
- ☐ நீர்-விளையாட்டு நடவடிக்கை
  Water activitiy
- ☐ இரவுத்-தங்கல் வெளிச்சுற்றுலா
  Overnight excursion

## இரவுத்-தங்கல் வெளிச்சுற்றுலாவிற்கான அறிவிப்புகள் (Overnight excursion advice)

இரவுத் தங்கல் அடங்கியுள்ள வெளிச்சுற்றுலாக்களுக்காகக் கீழே காணப்படும் கூடுதல் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Teacher to complete if relevant. Consider adding advice on the number of students and teachers who will be attending and if protective or special equipment will be required.

தங்குமிடம் முன்பதிவு செய்யப்பட்டுள்ள இடம் (Where accommodation is booked)

கூடுதல் தகவல்கள் (Additional information)

## பயணக் காப்பீடு குறித்த அறிவிப்பு (Travel insurance advice)

விமானப் பயணங்கள் உள்ளடங்கும் வெளிச்சுற்றுலாக்களுக்காக பெற்றோர்கள்/பராமரிப்பளர்கள் பயணக் காப்பீடு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டுமென திணைக்களம் சிபாரிசு செய்கிறது.

## நீச்சல் நடவடிக்கைகள் குறித்த அறிவிப்பு (Swimming activity advice)

நீச்சல் நடவடிக்கைகள் அடங்கியுள்ள வெளிச்சுற்றுலாக்களுக்காக, பெற்றோர்/பராமரிப்பாளர் 'நீச்சல் நடவடிக்கை அறிவிப்புப் படிவ'த்தில் தமது பிள்ளையின் நீச்சல் திறன் என்ன என்பதை அறிவித்து, அப் படிவத்தை நிரப்பி அதைப் பாடசாலைக்குத் திருப்பியளிக்கவேண்டியது கட்டாயம். இடம்பெறவிருக்கும் நீச்சல் நடவடிக்கைகள் யாவை, அவை எங்கு இடம்பெறும், மற்றும் இதற்கான சம்மதம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்தப் படிவம் அளிக்கிறது. தண்ணீரில் இருக்கும் பொழுது உதவி தேவைப்படும் மாணவ-மாணவியருக்குக் கீழே சொல்லப்பட்டுள்ள மிதவை சாதனங்களைப் பாடசாலை கொடுக்கும்.

பொருந்தும் தருணங்களில், கொடுக்கப்படும் மிதவை சாதனங்கள்

Types of flotation devices to be provided by the school and how they will be used

### நீர்-விளையாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவிப்பு (Water activity advice)

நீர்-விளையாட்டு நடவடிக்கைகள் அடங்கியுள்ள வெளிச்சுற்றுலாக்களுக்காக, பெற்றோர்/பராமரிப்பாளர் 'நீர்-விளையாட்டு நடவடிக்கை அறிவிப்புப் படிவ'த்தில் தமது பிள்ளையின் நீச்சல் திறன் என்ன என்பதை அறிவித்து, அப் படிவத்தை நிரப்பி அதைப் பாடசாலைக்குத் திருப்பியளிக்க வேண்டியது கட்டாயம். இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை. மாணவ-மாணவி ஒருவர் நீர்-விளையாட்டுகளில் ஈடுபடமாட்டார் என்றாலும், அவர் தவறுதலாக தண்ணீரில் விழுந்துவிடக் கூடும். எவ்விதமான நீர்-விளையாட்டு நடவடிக்கைகள் இடம்பெறும், அவை எங்கு இடம்பெறும், மற்றும் இந்த நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான சம்மதம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை இந்தப் படிவம் கொடுக்கிறது.

### தகவல் பாதுகாப்பு குறித்த அறிவிப்பு (Privacy advice)

இந்தப் படிவத்தில் வேண்டப்பட்டுள்ள தகவல்கள் 'NSW கல்வித் திணைக்கள'த்தினால் திரட்டப்படுகின்றன. இந்தப் பாடசாலையினால், அல்லது இந்தப் பாடசாலையுடன் இணைவாக நடாத்தப்படும் பாடசாலை வெளிசுற்றுலாக்கள், விளையாட்டு நடவடிக்கைகள் அல்லது மற்ற கல்வி அல்லது பாடசாலை நடவடிக்கைகளில் பங்குபற்றக் கூடிய இந்தப் பாடசாலையில் தற்போது பெயர் சேர்க்கப்பட்டுள்ள உங்களுடைய பிள்ளையைப் பற்றிய தக்க மருத்துவத் தகவல்கள், அவருக்கான தேவைப்பாடுகள் மற்றும் உடல்-நலம் சம்பந்தப்பட்ட இதர தேவைகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கத்திற்காக இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

பாடசாலை வெளிச்சுற்றுலாக்கள் அல்லது பாடசாலை சம்பந்தப்பட்ட மற்ற நடவடிக்கைகளை நடாத்தும் பொழுது அவற்றைத் திட்டமிடவும், மாணவ-மாணவியருக்கு ஆதரவுதவியாக இருக்கவும், ஆபத்துக்கூறுகளை மட்டுப்படுத்தவும் பாடசாலையினால் இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படும்.

வெளிச்சுற்றுலாவில் பாடசாலையுடன் சேர்ந்து வருபவர்கள், சுற்றுலா, விளையாட்டுகள் அல்லது மற்ற பாடசாலை நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அவற்றை வழங்குவதில் ஈடுபாடு கொண்டுள்ள தொண்டர்கள் அல்லது வெளிப்புற அமைப்புகளின் அங்கத்தவர்கள், மற்றும் இப்படிப்பட்ட வெளிச்சுற்றுலாக்கள் மற்றும் நடவடிக்கைகள் நடைபெறும் வேளையில், அல்லது அவற்றினால் ஏற்படும் ஒரு விளைவின் காரணமாக உடல்-நலப் பராமரிப்பு அல்லது மற்ற உதவிகளை வழங்குபவர்கள் போன்ற மற்ற ஆட்கள் அல்லது முகமைகளை உள்ளடக்கியவர்களுடன், ஆனால் இவர்கள் மட்டுமல்ல, இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படலாம்.

தகவல்களைக் கொடுப்பது ஒருவரது சுய விருப்பத்தைப் பொறுத்தது, ஆனாலும் வேண்டப்படும் தகவல்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நீங்கள் கொடுக்கவில்லையேல், வெளிச்சுற்றுலாவில் உங்கள் பிள்ளை கலந்துகொள்ள இயலாது. அப்படிப்பட்ட சூழல்களில், வலுவானதொரு மாற்றுக் கல்வி அனுபவம் ஒன்றைப் பாடசாலை ஏற்படுத்தித் தரும்.

இந்தத் தகவல்களைக் கொடுப்பதென்பது, இன்னும் அதிகப் பாதுகாப்பான வகையில் கல்வி நடவடிக்கை ஒன்றைத் திட்டமிடுவதில் பாடசாலைக்குக் குறிப்பிடத்தக்க அளவில் உதவியாக இருக்கும். இத் தகவல்கள் பாதுகாப்பாக இருப்பில் வைக்கப்படும். இந்தத் தகவல்களைக் கொடுப்பதைப் பற்றிய கவலைகள் ஏதும் உங்களுக்கிருந்தால், அவற்றைப் பற்றி மேற்கொண்டு கலந்துபேச பாடசாலை அதிபருடன் தயவு செய்து தொடர்புகொள்ளுங்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலமாக பாடசாலையுடன் எவ்வொரு வேளையிலும் தொடர்புகொண்டு கொடுக்கப்பட்டுள்ள தனி-நபர் தகவல்கள் எதிலும் நீங்கள் திருத்தம் செய்யலாம்.

Teacher to complete the following information

School name ______________________________
பாடசாலையின் பெயர்

School phone number ______________________________
பாடசாலையின் தொலைபேசி இலக்கம்

Name and signature of excursion coordinator ______________________________
வெளிச்சுற்றுலா ஒருங்கிணைப்பாளரது பெயர் மற்றும் அவரது கையொப்பம்

Name and signature of principal ______________________________
பாடசாலை அதிபரது பெயர் மற்றும் அவரது கையொப்பம்

Date ______________________________
திகதி

### தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால் தயவுசெய்து பாடசாலையை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யை 131 450-இல் அழைத்து, உங்கள் மொழியில் ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவை என்று கேளுங்கள். தொலைபேசி மூலம் பாடசாலையை அழைத்து, உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடைய மொழி பேசும் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.